# கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்
முனைவர் (திருமதி) ஜெ. மஞ்சுளா,
எம்.எஸ்.ஸி.,பி.எட்.,எம்.பில்.,பி.எச்.டி.,
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை –600 006.

பெறுநர்
முதல்வர்கள்,
அனைத்து அரசு கலை, அறிவியல்
மற்றும் கல்வியியல் கல்லூரிகள்.

ந.க.எண். 22344/டி5/2017 நாள்:23 .01.2018

அய்யா /அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் இணை/உதவிப் பேராசிரியர்கள் – தர ஊதியம் ரூ.6000/–லிருந்து ரூ.7000/–மாக உயர்த்த கோரும் கருத்துருக்கள் – கல்விச்சான்றுகளின் மீது மெய்த்தன்மை குறித்த பதிவுகள் இல்லாமல் பெறப்படுதல் – தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.22344/டி5/2015, நாள்:23.06.2015.
2. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.30279/டி2/2016, நாள்:18.03.2016.
3. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.28092/டி5/2016, நாள்:21.07.2016.

-------

01.01.2006–க்கு பின்னர் பணியில் சேர்ந்த உதவிப் பேராசிரியர்களுக்கு தற்போது உள்ள நடைமுறைகளை பின்பற்றி தர ஊதியம் ரூ.6000/–லிருந்து ரூ.7000/–மாக உயர்த்த கோரும் கருத்துருக்கள் இவ்வலுவலகத்தில் பெற்றப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பார்வையில் காணும் இவ்வலுவலக கடிதங்களில் அனைத்து இணைப் பேராசிரியர்கள்/உதவிப் பேராசிரியர்களின் அனைத்து கல்விச்சான்றிதழ்களின் மீதும் மெய்தன்மை சான்று பெறப்பட வேண்டும் என அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மெய்த்தன்மை பெறப்படுவதை உறுதி செய்வதற்கு ஏதுவாக, தர ஊதிய கருத்துருக்களுடன் அனுப்பப்படும் பணிப்பதிவேடுகளில் கல்விச்சான்றுகளின் மீது மெய்தன்மை பெறப்பட்ட விவரங்கள் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்யப்பட்ட பிறகே உரிய ஆணை வழங்கப்படுகிறது.

இருப்பினும் தற்போது 2007, 2008 மற்றும் 2009–ஆம் ஆண்டுகளில் பணியில் சேர்ந்துள்ள உதவிப் பேராசிரியர்களின் பணிமேம்பாடு கருத்துருக்களுடன் பெறப்படும் பணிப்பதிவேடுகளை பரிசீலித்ததில் பெரும்பாலான உதவிப் பேராசிரியர்களின் கல்விச்சான்றுகளின் மீது மெய்தன்மை பெறப்பட்ட விவரம் பதிவு செய்யப்படவில்லை. 2011–ஆம் ஆண்டுக்கு பின்னர் பணியில் சேர்ந்த உதவிப் பேராசிரியர்களை பொறுத்த வரையில் தகுதிகாண் பருவம் நிறைவு ஆணை வழங்கும் போதே அவர்களின் கல்விச்சான்றுகளின் மீது மெய்தன்மை பெறப்பட்ட விவரம் உறுதி செய்யப்பட்ட பின்னரே அவர்களுக்கு தகுதிகாண் பருவ நிறைவு ஆணை வழங்கப்பட்டது.

ஆனால், 2007, 2008 மற்றும் 2009–ஆம் ஆண்டுகளில் பணியில் சேர்ந்துள்ள உதவிப் பேராசிரியர்களின் பணிமேம்பாடு கருத்துருக்கள் சில கல்லூரிகளிலிருந்து தாமதமாக அனுப்பப்படுகிற நிலையில் அவர்களின் கல்விச்சான்றுகளின் மீது மெய்தன்மை பெறப்படாமல் உள்ளது.

எனவே, 2007, 2008 மற்றும் 2009–ஆம் ஆண்டுகளில் பணியில் சேர்ந்துள்ள உதவிப் பேராசிரியர்களுக்கும் தர ஊதியம் உயர்த்தி கோரும் கருத்துருக்கள் அனுப்பும் போது அவர்களின் (NET/SET/SLET உட்பட) அனைத்து கல்வி சான்றிதழ்களின் மீதும் மெய்த்தன்மை பெற்று உரிய பதிவுகளை பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் நகல்களுடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனை தவறாது பின்பற்றுமாறும், குறைபாடுகள் காரணமாக கருத்துருக்களை கல்லூரிக்கு திருப்பியனுப்பும் நிலை எழாத வண்ணம் செயல்படுமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜெ. மஞ்சுளா 25/1/18

**கல்லூரிக் கல்வி இயக்குநர்**

நகல்:

இயக்கக 'சி!' பிரிவு